**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.13/2024

பி.வா.சா.1– தங்கராஜ த/பெ மாணிக்கம் மனுவின் பேரில் சாட்சியம் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 21.07.2025ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பி.வா.சா.1–</u>** <u>தங்கராஜ த/பெ மாணிக்கம்</u>

**<u>வாதி தரப்பு முதல் விசாரணைதொடர்ச்சி</u>**

1. குளித்தலை சார்பு நீதிமன்றம் ஜீவனாம்ச வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட பிறகு கடந்த 22.06.2006 அன்று எனது ஓய்வு கால பலன்களில் இருந்து மொத்தம் ரூ.59,784/–மட்டும் கொடுத்து எனது மனைவியிடம் ரசீது பெற்றுள்ளேன். **(22.06.2006 அன்று தேதியிட்ட ரசீது பி.வா.சா. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 28.09.2006ம் தேதி ரூ.1,47,296/– உதவி தொடக்ககல்வி அலுவலர் மூலமாக பெற்றுக் கொண்டதற்காக ரசீது எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதாபன். (**28.09.2006 ரசீது பி.வா.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (**மேற்படி தொகைக்கு எனது மனைவி நேரிடையாக எழுதிக்கொடுத்த அத்தாட்சி பி.வா.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஜீவனாம்ச வழக்கில் ஏற்பட்ட சமரசதீர்ப்புப்படி நான் எனது மனைவிக்கு ஓய்வூதியப்பலன்களில் இருந்து பணம் கொடுத்துள்ளேன்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இன்று தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி இன்று குறியீடு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் வழக்ககாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.07.22 17:56:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.